# நாம் தேவனை எவ்வாறு சேவிப்பது

## ஒருவருக்கொருவர் சேவை செய்ய சிறுவர்களுக்கு போதிப்பது

சிறுவர்களுக்கான பின்வரும் கல்வி நடவடிக்கைகளில் எதையாவது தெரிந்து கொள்க.

**மத். 25: 14-30** ஐ ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஆசிரியரோ கூறட்டும். அது உண்மையுள்ள உக்கிராணக்காரனைப் பற்றியது.

- தேவன் நாம் ஒவ்வொருவருக்கும் தமக்கான ஒரு வேலையை செய்யக் கொடுக்கிறார்.
- நாம் யாவரும் அவரது ஊழியக்காரர்கள். அவர் நமக்கு கொடுக்கும் எல்லாவற்றையும் கொண்டு நாம் அவருக்கு சேவிக்க வேண்டும்.
- “தாலாந்து” என்பது ஒரு தங்க நாணயம் என்பதை **விளக்கவும்.**



**கதையை கூறிய பின்** கேள்விகளைக் கேட்கவும் (பதில்கள் கேள்விகளுக்கு பின்).

- அந்த மனிதன் தனது மூன்று ஊழியக்காரர்களுக்கு எவ்வளவு தாலந்துகளைக் கொடுத்தான்? (15)
- தனக்கு கிடைத்த பணத்தைக் கொண்டு ஒவ்வொரு வேலைக்காரனும் என்ன செய்தான்? (16-18).
- பணத்தை ஞானமாக உபயோகித்த வேலைக்காரர்களிடம் எஜமானன் என்ன கூறினான்? (21)
- சோம்பேறியான வேலைக்காரன் தனது தங்க நாணயத்தை என்ன செய்தான்? (25)
- இந்த வேலைக்காரனுக்கு என்ன நேர்ந்தது? (30).

உண்மையுள்ள உக்கிராணக்காரன் கதையை **நாடகமாக்கவும்:**

- சபைத் தலைவரோடு பேசி ஆராதனை வேளையில் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க.
- இந்த நாடகத்தைக் குழந்தைகள் தயாரிக்க உதவ உங்கள் நேரத்தை ஒதுக்கவும்.
- இந்தக் கதையின் எல்லா பகுதியையும் பயன்படுத்த வேண்டாம்.
- பெரிய பிள்ளைகள் நாடகம் தயாரிக்க சிறுவர்களுக்கு உதவவும்.
- பிள்ளைகள் **15 பெரிய நாணயங்களை** உருவாக்கவும் (கட்டி காகிதத்தை வெட்டி உருவாக்கலாம்).

**பெரிய பிள்ளைகள்** அல்லது பெரியவர்கள் பின் வரும் பாத்திரங்களை ஏற்கவும்:

**கதை கூறுபவர்:** கதைச் சுருக்கம் கூறி பிள்ளைகள் பேச வேண்டியவற்றை நினைப்பூட்டுபவர்.

**எஜமானன்:** (வீட்டு) ஒரு பயணப் பையும், எட்டு நாணயங்களும் வைத்துக் கொள்ளவும்.

**சிறு பிள்ளைகள்** நடிக்க வேண்டிய பாத்திரங்கள்

**உண்மையுள்ள ஊழியக்காரர்கள்** 1,2 . சோம்பேறியான ஊழியக்காரன், கல்லை வைத்துக் கொள்ளவும்.

**வியாபாரிகள்:** (கருவிகள், பெட்டி, காகிதம்) போன்ற வியாபாரப் பொருட்களை வைத்துக் கொள்ளவும். மேலும் 7 பெரிய நாணயங்களையும் வைத்துக் கொள்ளவும்.

### உண்மையுள்ள ஊழியக்காரர்கள் உவமையை நாடகமாக்குதல்

**கதை கூறுபவர்:** கதையின் முதல் பகுதியை மத். 25:14-18 லிருந்து கூறுக. பின் கூறவேண்டியது, "வீட்டு எஜமானன் கூறுவதைக் கேளுங்கள்."

**வீட்டு எஜமானன்:** பையைத் தோளில் போட்டுக் கொண்டு, கூறுவது, "நான் ஒரு பெரிய பயணம் போகிறேன். நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் முதலீடு செய்ய கொஞ்ச பணம் தரப்போகிறேன். வாங்க!"

5 நாணயங்களை எண்ணி 1 ம் வேலைக்காரனுக்கும்,

2 நாணயங்களை 2 ம் வேலையாளுக்கும்

1 நாணயத்தை சோம்பேறி வேலைக்காரனுக்கும் கொடுக்கவும்.

**உண்மையுள்ள ஊழியக்காரர்கள்:** வியாபாரிகளிடம் சென்று பொருட்களை வாங்கி நாணயத்தைக் கொடுக்கவும்.

**சோம்பேறி ஊழியக்காரன்:** யாரும் பார்க்கிறார்களா என்று சுற்று முற்றும் பார்த்துவிட்டு, கையில் இருந்த கல்லின் அடியில் நாணயத்தை வைக்கவும். "நான் எனது நாணயத்தைப் பத்திரமாக இருக்கும்படி புதைத்து வைப்பேன்."

**கதை கூறுபவர்:** மத். 25:19-23 லிருந்து கதையின் இரண்டாம் பகுதியைக் கூறவும். பின் சொல்லவும், "வீட்டு எஜமானன் கூறுவதைக் கேட்கவும்."

**வீட்டு எஜமானன்:** "நான் பயணம் சென்று திரும்பி வந்து விட்டேன். முதலீடு செய்ய நான் கொடுத்துச் சென்ற தங்க நாணயங்களைக் கொண்டு வாருங்கள்.!"

**உண்மையுள்ள ஊழியர்கள் 1 & 2:** வணிகர்களிடம் சென்று கையில் இருக்கம் பொருட்களை திரும்பவும் விற்கின்றனர்.

**வணிகர்கள்:** பொருட்களை வாங்கிக் கொண்டு சத்தமாக சொல்லுதல் "இந்தத் தடவை அதிகமாக பொருட்களை விற்கிறாய் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறாய் போலும்!" (அவர்கள் கொடுத்த நாணயத்தையும் தங்களிடம் இருந்ததையும் கொடுக்கின்றனர்).

5 கொடுத்த வேலையாள் பத்தும்,

2 கொடுத்தவன் நான்கும் பெறுகின்றனர்)

**உண்மையுள்ள ஊழியக்காரன் 1:** எஜமானனிடம் கொடுத்து, "நான் பொருட்களை விற்று நீர் கொடுத்த பணத்தை இரட்டிப்பாக்கினேன். நீர் ஐந்து தங்க நாணயம் கொடுத்தீர் இதோ 10 நாணயம்."

**உண்மையுள்ள ஊழியக்காரன் 2:** எஜமானனிடம் 4 நாணயங்களைக் கொடுத்து. அவர் கொடுத்ததை இரட்டிப்பாய் மாற்றியதைக் கூறவும். வாங்கி விற்றதை விளக்கவும்.

**எஜமானன்:** "நல்லது. உண்மையுள்ள ஊழியக்காரர்களே! என்னோடு சேர்ந்து வாழுங்கள். இன்னொருவன் எங்கே?"

**கதை கூறுபவர்:** மத். 25:24-30 ல் உள்ள கதையின் மூன்றாம் பகுதியைக் கூறவும், பின் "சோம்பேறியான வேலைக்காரன் கூறுவதைக் கேளுங்கள்."

**சோம்பேறி வேலைக்காரன்:** கல்லின் அடியில் இருந்த ஒரு நாணயத்தை எடுத்துக் கொண்டு கொடுத்து, “ஐயா! இதோ உங்கள் பணம்! நான் அதைக் கொண்டு எதையும் செய்யவில்லை. அதை இழந்து போவோமோ என்று பயந்தேன். ஒரு பாறையின் அடியில் மறைத்து வைத்தேன்.”

**எஜமானன்:** “சோம்பேறியான வேலைக்காரனே! நான் கொடுத்த பணத்தை நீ முதலீடு செய்யவில்லை. வீட்டை விட்டு வெளியே போ!”

**கதை கூறுபவர் அல்லது ஒரு பெரிய பிள்ளை:** நாடகம் முடிந்து விட்டதைக் கூறி, உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும்.

**கேள்விகள் கேட்கவும்:** பிள்ளைகள் இந்த நாடகத்தைப் பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால், மேலே பட்டியல் இடப்பட்ட கேள்விகளையும் கேட்கவும்.

**விவாதம்:** தேவனை சேவிக்க நாம் உபயோகிக்கும் வண்ணம் தேவன் அளிக்கும் வரங்கள் அல்லது ஆசீர்வாதங்களுக்கான வேறு உதாரணங்கள் என்ன? (பிள்ளைகளும் பெரியோரும் உதாரணங்களைத் தரட்டும்).

படம்: ஒரு பெரிய நாணயத்தின் படம் வரைக: பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும்.

- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவவும்.
- **வரைந்த படத்தை** பெற்றொருக்கும் ஆராதனையின் போது பெரியவர்களுக்கும் காட்டவும்.
- தேவன் நமக்கு வரங்களையும் ஆசீர்வாதத்தையும் தருவது அவரை சேவிப்பதற்காகவே. நமக்காகப் புதைத்து வைப்பதற்காக அல்ல.



**மனன வசனம்:** மத். 6:24.

**சங்கீதம்:** சங். 65:4, 5, 9 ஐ மூன்று சிறுவர்கள் ஆளுக்கு ஒன்றாக ஒப்புவிக்கட்டும்.

**பெரிய பிள்ளைகள்,** தேவனுடைய வரங்களைக் கொண்டு பிறருக்கு சேவை செய்வது குறித்து கவிதை, பாடல் அல்லது நாடகம் எழுதவும்.

**ஜெபம்:** “அன்பான கர்த்தாவே! நீர் தயாளம் உள்ளவர். நீர் எங்களுக்கு பல வரங்களையும் ஆசிர்வாதங்களையும் தந்துள்ளீர். இந்த வரங்களைக் கொண்டு உமக்கு சேவை செய்ய உதவும். உம்முடைய நாமத்தினால் உண்மையோடு பிறருக்கு சேவை செய்ய உதவுவீராக. எங்களுடைய வரங்களை உமக்காக உபயோகிக்க நாங்கள் தவறும்போது மன்னிப்பீராக.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net